# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 22.10.2025**

**அசல் வழக்கு எண். 295/2012**

**பி.வா.சா.2 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் யார் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் பிரதிவாதி பாப்பா அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது பூர்வீக ஊர் எது என்றால் வடக்குமலையடிப்பட்டி ஆகும். மேற்படி வடக்குமலையடிப்பட்டி எனது பூர்வீக கிராமம் என்பதை நிரூபிப்பதற்கு ஆதார் அட்டையோ, குடும்ப அட்டையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதி பெயர் தெரியுமா என்றால் தெரியும். வாதியின் பெயர் முருகேஸ்வரி. பிரதிவாதியின் பெயர் பாப்பா. வாதி மற்றும் பிரதிவாதியை எத்தனை வருடஙகளாக தெரியும் என்று எனது நிரூபண உறுதிக்கூற்றில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதி எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை எனது சிறுவயதிலிருந்து எனக்கு தெரியும்.

2. பிராது தபசில் சொத்துக்கு அருகாமையில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து எதுவும் உள்ளதா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் ஊருக்கு வடக்கில் மெயின்ரோட்டுக்கு கிழக்கு பக்கத்தில் அமைந்துள்ளது. பிராது தபசில் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் அதன் சர்வே எண்.770 ஆகும். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாய வேலை செய்து வருகிறேன். காய்கறி வாங்கி விற்கும் வியாபாரமும் செய்து வருகிறேன். பிரதிவாதி எனது உறவினரா என்றால் இல்லை. பிரதிவாதி எனது ஊரைச்சேர்ந்தவர். பிரதிவாதி எனது ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**